முருகப்பெருமான் துணை

# மகான் இராமதேவர் அருளிய துல்லிய ஆசி நூல்

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

17.07.2021, சனிக்கிழமை

1. பிரளயம் பேரிடரை போக்கவந்த
பிரணவ சித்திமிகு ஞானியே
அரங்கனே ஆறுமுக அவதாரமே
அண்ணலே உன்னால் அற்புதம்தன்னை
2. தன்னையே தரணி கண்டடையுமென
தக்க துல்லிய ஆசி தன்னை
பொன்னாளாம் பிலவ நள்ளி திங்கள்
புகலுவேன் முதல் திகதி காரி வாரம்
(பிலவ வருடம் ஆடி மாதம் முதல் நாள், 17.07.2021 சனிக்கிழமை)
3. வாரமதில் இராமதேவர் யானும்
வழங்குவேன் வையகம் பாதுகாப்புற
சோரமான நச்சுக்கிருமி அல்லலாகி
சுபிட்சமிலா மக்களை முடக்கி வர
4. வருகின்ற இந்த அவலம் விலக
வதைகள் இன்னும் தொடராதிருக்க
முருகப் பெருமான் மேலான வழிபாடு
முழுமைபட உலகமே ஏற்று செய்திட
5. செய்திட துன்பங்கள் அகலும்
சுத்த சைவ நெறி ஏற்று
அய்யமற ஜீவ தயவு மிக்கவராக
அனைவரும் ஞானவழிக்கு வர
6. வருகவே கலியுக அவதாரம்
வடிவேலனின் சூட்சுமமாக அரங்கன்
தருகின்ற தருமமே தலைகாக்குமென
தரணியோர் ஏற்று சரணடைந்து
7. சரணடைந்து அவரவரால் இயன்றளவு
சதா அன்னதான சேவை செய்து
சரணடைவு உறுதி ஆகிவிட
சற்குருவாய் இறைஅருள் துணைவந்து
8. வந்துமே பாதுகாப்பு பெருகும்
வதை செய்யும் சகல பேரிடரும்
வந்த சுவடு தெரியாவிலகியோடி
வையகமே அமைதி பாதுகாப்பு காண்கும்
9. காண்கவே இந்தநிலை கண்டும்
கலியின் அதிகார வர்க்கங்கள்
உண்மைபட தயவான சேவையாற்றா
ஊழலான நிலைகள் தொடர்ந்தால்

10. தொடரும் தொடர் அலைகளாக
தொல்லைகள் உயிர்பலி பெருகி
இடர்கள் மிகும் பேருலகம் தன்னில்
இனியும் காலம் தாழ்த்தா வண்ணம்

11. வண்ணமுடன் ஞானவழி வர
வள்ளல் அரங்கன் நெறி ஏற்றிட
எண்ணம் வழி தயவு பெருகி
எல்லாம் நன்மைபட பாதுகாப்பாக மாறும்
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–